சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

MCOP.No.02/2023

மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. J. சரஸ்வதி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

பெயர்: திருமதி. ராதிகா க/பெ: ராமச்சந்திரன்

வயது: ஊர் :

தொழில்: முகவரி:

தேதி: 19.06.2025 தாலுக்கா :

**முதல் விசாரணை...**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 14.09.2022 | முதல் தகவல் அறிக்கை | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | -- | Death Certificate | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | -- | Legal Heir Certificate | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.3 |
| 4 | 02.02.2022 – 01.02.2023 | இன்சூரன்ஸ் பாலிசி | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 14.09.2022 | AR copy | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.5 |
| 6 | -- 15.09.2022 | Post Mortem Certificate | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.6 |
| 7 | 22.09.2022 | MV Report (TN-50-AJ-8860) | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.7 |
| 8 | -- | Rough Sketch | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.8 |
| 9 | -- | Final Report | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.9 |
| 10 | -- | இறந்து போனவரின் Transfer Certificate (Diploma in Civil Engineering) (அசலுடன் சரிபார்க்கப்பட்டது அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்) | நகல் | ம.சா.ஆ.10 |
| 11 | -- | இறந்து போனவரின் Course Completion Certificate (Civil Eng) (அசலுடன் சரிபார்க்கப்பட்டது அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்) | நகல் | ம.சா.ஆ.11 |
| 12 | | இறந்து போனவரின் ஆதார் அட்டை (அசலுடன் சரிபார்க்கப்பட்டது அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன்) | நகல் | ம.சா.ஆ.12 |

மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் விவசாய வேலை செய்துவருகிறார். எனக்கும் எனது கணவருக்கும் வரும் வருமானத்தை வைத்துதான் எங்கள் குழந்தைகளை பராமரிக்கிறோம் என்றால் சரிதான். விபத்தின் போது எனது மகன் பயணம் செய்த வாகனம் பல்சர் இருச்சக்கர வாகனம் என்றால் சரிதான். இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம்

இல்லை என்றால் சரிதான். இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் நஷ்ட ஈடு கோரமுடியாது என்றால் சரியல்ல. இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் இருவரும் ஹெல்மெட் அணியவேண்டும் என்றால் சரிதான். இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்த என் மகனும் வாகனத்தை ஓட்டிய நபரும் ஹெல்மெட் அணிந்திருந்தால் எனது மகன் இறந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது மகன் விபத்து ஏற்படும்போது ஹெல்மெட் அணியவில்லை என்றால் நான் பார்க்கவில்லை. எனது மகன் பயணம் செய்த இருச்சக்கர வாகனம் வேறு ஒரு இருச்சக்கர வாகனத்தில் மோதிதான் விபத்து ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. மனுவில் எனது மகன் சென்ற இருச்சக்கர வாகனம் வேறு ஒரு இருச்சக்கர வாகனத்தில் மோதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் நின்று கொண்டிருந்த இருச்சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படவில்லை என்றாலும் ஏற்கனவே ரோட்டில் முன்னால் சென்றுக்கொண்டிருந்த இருச்சக்கர வாகனத்தில் மோதி தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளரையோ, ஓட்டுநரையோ ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனவே 2 ஆம் எதிர்மனுதார் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது மகன் பயணம் செய்த இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு உரிமம் நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் வருமானத்தில் தான் எனது மகன் வாழ்ந்து வந்தார் என்றாலும் அவருக்கென்று தனிப்பட்ட வருமானம் இல்லை என்றாலும் சரியல்ல. மனுவில் கோரியுள்ள நஷ்ட ஈட்டுதொகை அதிகம் என்பதாலும் அதை 2 ஆம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ளவாறு எனது மகனின் வயது மற்றும் வருமானத்தை காட்டக்கூடிய

ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்காமல் 1 ஆம் எதிர்மனுதாரர் இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்றதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரருக்கு இருச்சக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் உள்ளது என்றால் சரிதான். விபத்துக்குள்ளான இருச்சக்கர வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் காப்பீடு செய்யப்பட்டள்ளது என்றால் சரிதான். காப்பீடு சம்பந்தமாக நஷ்ட ஈடு வேண்டும் என்றால் 1 ஆம் எதிர்மனுதாரர் சார்பாக 2 ஆம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனவே 1 ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.